கவனிக்காமல், ஆரம்பிப்பதைமட்டும் கவனித்து, ஆரம்பித்துவிட்டு, அனுமதிக்கு வந்ததால் 96 பள்ளிகளுக்கு அனுமதி மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த மாதிரிச் சங்கடமான சூழ்நிலையில், சென்ற மார்ச் திங்களில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அதிகாரிகளைக் கலந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். எந்த எந்தப் பள்ளிகளில் 30 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு, 20 மாணவர்களாவது வருகை தந்திருக்கிறார்களோ அந்தப் பள்ளிகளையெல்லாம் அங்கீகரித்து விடலாம்; ஆனாலும் இனிமேல் பள்ளிக்கூடங்களை முன்கூட்டியே அரசின் உத்தரவு இல்லாமல் துவங்கக் கூடாது என்றும் நடைமுறைப் படுத்தப் பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மாதிரி பஞ்சாயத்து யூனியனில் பள்ளிக்கூடங்களைத் திறந்துவிட்டு அங்கீகாரத்திற்கு எழுதலாம் என்ற அடிப்படையில், 300 ஜனத் தொகைக்கு அதிகமாக இருந்து, ஒரு மைலுக்குக் குறைவாக இருந்தாலும், அங்கீகாரம் இல்லாமல் இருக்கிறது. அங்கீகாரம் கிடைக்கும் என்று தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி முடிவு எடுத்திருப்பது பற்றிய ஆர்டர்களைச் சீக்கிரம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. ஆணை பிறப்பித்து அனுப்பப்படாமல் இருந்தால், அதைப்பற்றி எழுதினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : புதிய பள்ளிக்கூடங்களை அங்கீகரிக்க விதிமுறைகள் செய்யப்பட்டு, அதன்பேரில் 30 மாணவர்கள் இருந்து, 20 மாணவர்கள் வந்திருந்தாலும் அனுமதி கொடுப்பது என்பது இருந்தாலும், முன்னால் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் படித்து இருப்பவர்களை, பாஸ் செய்திருப்பவர்களை வேறு பள்ளிகளில் சேர்க்க வழி வகை செய்யக்கூடிய உத்தரவைப் போட முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படித்துப் பாஸ் செய்த மாணவர்களுடைய பிரச்சினையை அரசு கவனிக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட பள்ளிகளுக்குத் தொடர்ந்து அங்கீகாரம் அளிக்கும் நிலையை அரசாங்கம் ஏற்க முடியாது.

அரிசன நலத்துறை ஆசிரியர்கள்

* 269 வின.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரிசன நல இலாக்காவின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களை முன்னாள் ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அவர்களது சர்வீசுடன் மாற்றி அனுமதிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1969 செப்டம்பர் 13]

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகர் அவர்களே, அரிசன ஆசிரியர்கள், பி.எ., பி.டி. படித்து முடித்தவர்கள், ஹெட்மாஸ்டர்களாகவும், அஸிஸ்டெண்ட்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயத்தில், திருமணம் ஆன ஆசிரியர்களுடைய மனைவிகள், ஆசிரியைகளாக அரிசன நல இலாகாவில் செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியைகளாக இருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இரண்டு வேறு டிபார்ட்மெண்டுகளில் இருப்பதால், குடும்பம் ஒற்றுமையாக இருக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஆசிரியைகளை அவர்களுடைய முன்னாள் சர்வீசோடு, ஜில்லா போர்டு, அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்ற மறுபரிசீலனை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரிசன ஆசிரியர், ஆசிரியைகள் தனித்தனித் துறைகளில் பணி புரிவதால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் ஒரே பள்ளியில், கணவன் மனைவியர், பணி புரிவதால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுவதாகவும் புகார்கள் வருகின்றன. (சிரிப்பு). அரசினர் உயர்நிலைப்பள்ளி, மாவட்ட வாரியப் பள்ளி இவற்றில் உள்ளவர்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. அரிசன நலப் பள்ளிகளில் இருப்பவர்களை சர்வீசோடு எடுக்க விதி முறையில்லை. எதிர் காலத்தில் அது கவனிக்கப் படலாம். இப்பொழுது அரசினர் உயர் நிலைப் பள்ளி, வாரியப் பள்ளிகளை இணைக்கும் முயற்சி முடிந்த பிறகு, அதை அரசு கவனிக்கும்.

செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி

** 270 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் :* மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சிக்கு எஸ்.எஸ்.எல்.சி-யில் தவறிய அரிசன மாணவ மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்களா ?

(இ) அதே போல் பெண்களுக்கும் சலுகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆகியவர்களிலே, விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு மதிப்பெண்கள் பெற்றுள்ளவர்கள், அவர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 16 சதவீத இடங்களை நிரப்பக் கூடிய வகையில் போதிய எண்ணிக்கையில் கிடைக்காவிட்டால், பொருத்தமான விதியைத் தளர்த்துவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரமுண்டு.

(இ) இவ்வாறு விதியினின்றும் விலக்களிக்கும் சலுகை அரிசனங்களல்லாத பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென உறுப்பினர் விரும்புகின்றார். இல்லை என்பதே இதற்கு விடையாகும்.